PRESS RELEASE – 63
19.08.2026

The Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) conducted a discreet enquiry into the enclosures received from the Managing Director, TNEB. The discreet enquiry disclosed prima facie information of commission of cognizable offence. Accordingly, a case was registered on 30.06.2026 at DVAC Headquarters in Crime No. 4/2026 under Sections 120-B, 420 and 409 of the IPC and Sections 13(1)(a) and 7(c) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, against unknown officials of TANGEDCO/TNPDCL, other unknown public servants, and private individuals/bidders for having colluded with the suppliers and, by misusing their official position, entered into a criminal conspiracy, committed criminal breach of trust and criminal misconduct, thereby causing a huge loss to the Government exchequer. Multiple suppliers quoted identical or similar rates and that the tender documents were uploaded from a common IP address, indicating possible cartelization in the tender process. Further, the final rates quoted in the tenders were higher than the rates available through the Government e-Marketplace (GeM) portal and other comparable procurement transactions during the

period from 2021 to 2023, in respect of the procurement of 2,07,495 KMs of aluminium conductors.

As part of the investigation, searches were conducted today, 19.08.2026, at the residences of TNPDCL officials, other public servants, private individuals, aluminium conductor manufacturing companies, and the office premises of the bidders. A total of 60 locations across the State were searched. During the searches, tender related documents, digital evidences, other incriminating materials and details of shell companies were seized.

The investigation in the case is under progress.



பத்திரிக்கை செய்தி வெளியீடு - 63

19.08.2026

தமிழ்நாடு மின்வாரியத்தின் (TNEB) மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை (DVAC) ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த ரகசிய விசாரணையில் கடந்த 2021 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் லிமிடெட் (TNPDCL) நிறுவனத்திற்கு அலுமினிய மின்கடத்திகள் கொள்முதல் செய்ததில் பிடிக்கக்கூடிய குற்றம் (Cognizable Offence) நடைபெற்றதற்கான முதற்கட்ட முகாந்திரம் இருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, 30.06.2026 அன்று DVAC தலைமையகத்தின் குற்ற எண். 4/2026ல், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 120-ஆ, 420 மற்றும் 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13(1)(a) மற்றும் 7(c) ஊழல் தடுப்பு திருத்த சட்டம் 2018 ஆகியவற்றின் கீழ் TANGEDCO/TNPDCL-ன் அடையாளம் தெரியாத அலுவலர்கள், பிற அடையாளம் தெரியாத அரசு ஊழியர்கள் மற்றும் தனி நபர்கள்/ ஒப்பந்ததாரார்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் TANGEDCO/TNPDCL-ன் அடையாளம் தெரியாத அலுவலர்கள், பிற அடையாளம் தெரியாத அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் ஒப்பந்ததாரர் ஆகியோர் விநியோகஸ்தர்களுடன் கூட்டு சேர்ந்து தங்களது அதிகாரபூர்வ பதவியை தவறாக பயன்படுத்தி குற்றமுறு சதியில் ஈடுபட்டு, குற்றவியல் நம்பிக்கை

மோசடி மற்றும் குற்றவியல் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும், இதன் மூலம் TANGEDCO/TNPDCL-ன் வாயிலாக அரசின் கருவூலத்திற்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் பல்வேறு விநியோகஸ்தர்கள் ஒரே மாதிரியான அல்லது ஒத்த விலைகளை ஒப்பந்த புள்ளிகளில் குறிப்பிட்டுள்ளதாகவும், ஒப்பந்த புள்ளி ஆவணங்கள் ஒரே I.P. முகவரியிலிருந்து பதிவேற்றம் செய்யப்பட்டதும் தெரியவந்துள்ளது. இது ஒப்பந்த புள்ளி நடைமுறையில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மூலம் கூட்டுச்சதி நடைபெற்றிருப்பதற்கான ஆதாரங்கள் முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது.

மேலும் 2021 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில், 2,07,495 கிலோ மீட்டர் அலுமினிய மின் கடத்திகளை கொள்முதல் செய்வதற்காக நடைபெற்ற ஒப்பந்த புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட இறுதி விலைகள், அரசின் GeM (Government e-market Place) இணையதளத்தில் குறிப்பிட்ட விலைகளை காட்டிலும் மற்றும் அதே காலகட்டத்தில் நடைபெற்ற ஒப்பிடத்தக்க கொள்முதல் பரிவர்த்தனைகளில் இருந்த விலைகளை காட்டிலும் அதிகமாக இருந்ததாக விசாரணையில் தெரிய வருகிறது.

விசாரணையின் ஒரு பகுதியாக, 19.08.2026 இன்று மாநிலம் முழுவதும் 60 இடங்களில் உள்ள TNPDCL அலுவலர்கள், பிற அரசு ஊழியர்கள், தனி நபர்கள், அலுமினிய மின்கடத்தி உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்த புள்ளிதாரர்களின் அலுவலக வளாகங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டன. இந்த சோதனைகளின்போது, ஒப்பந்த புள்ளி தொடர்பான ஆவணங்கள், மின்னணு ஆதாரங்கள் மற்றும் பெயரளவில் இயங்கும் வெற்று நிறுவனங்கள் தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கின் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
